International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நீதி நூல்களில் விலைமகளிர் குறித்த பதிவும் கவிஞர் சிற்பியின் மாற்றுச்சிந்தனையும்

**வி. ஜான்சி ராணி**
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்

**முனைவர் ந. சுபா**
இணைப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை
காவேரி மகளிர் கல்லூரி, திருச்சி -18

**ஆய்வுச் சுருக்கம்**

நீதி நூல்கள் விலைமகளிர் குறித்தும் அக்காலச் சமூக எதார்த்தத்தையும், ஒழுக்க விழுமியங்களையும் பிரதிபலிக்கின்றன. இன்றைய சூழலில் இவற்றை வரலாற்று ஆவணங்களாக அணுக வேண்டும். பெண்களின் மனித உரிமைகள், சமூக நீதி, பாலினச் சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் மறுபரிசீலனை செய்ய வேண்டும். யாரையும் தொழில் அல்லது சூழல் அடிப்படையில் வகைப்படுத்தாத மனிதாபிமான சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதோடு விலைமகளிர் தொடர்பைத் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. செல்வ அழிவு, குடும்ப நலன் குறைதல் ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையிலும் ஒழுக்கம் மற்றும் இல்லற வாழ்வின் மதிப்பை வலியுறுத்த இவற்றை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்துகின்றன. பண்டைய தமிழ்ச் சமூகத்தில் விலைமகளிர் ஒரு சமூக எதார்த்தமாக இருந்தனர். இசை, நடனம் போன்ற கலைகளில் திறமைமிக்கவர்களாக இருந்தனர். ஆனால், நீதி நூல்கள் ஒழுக்க நெறி நோக்கில் அணுகுகின்றன. இந்த வகைப்பாடுகள் பெண்களை இரண்டு முனைகளில் வைத்து பார்க்கும் பழமையான பார்வை பெண்களின் சுதந்திரம், உரிமைகள் குறித்த விழிப்புணர்வு இல்லாத காலகட்டத்தின் என்ற நோக்கத்தில் நவீன எழுத்தாளர் மரபில் தோன்றிய சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் மாற்றுச் சிந்தனையின் ஊடாக இக்கருத்தைத் தன் கவிதைகளில் வெளிப்படுத்துவதை இக்கட்டுரை ஆய்கிறது.

**முதன்மைச் சொற்கள்**

நீதி நூல்கள், விலை மகளிர், சமூகம், வரலாற்று ஆவணம், மனித உரிமைகள், சமூக நீதி, பாலினச் சமத்துவம், தொழில், ஒழுக்கம், இல்லறம், மாற்றுச் சிந்தனை.

**முன்னுரை**

சங்க காலம் தமிழர்களின் பொற்காலமாக விளங்கியது. மக்கள் உயர்ந்த ஒழுக்கமும் சீரிய நாகரிகமும் உடையவர்களாக விளங்கினர். சங்க காலத்தின் இறுதிப்பகுதி ஆடம்பரமும் ஆரவாரமும் உடையதாக மாறியது. கலை என்ற பெயரில் ஒழுக்கக்கேடுகள் தலைதூக்கின. திறனற்ற தமிழ் மன்னர்களால் நாட்டில் சீர்கேடும் ஒற்றுமையின்மையும் ஏற்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில், தமிழகத்தின் வட எல்லைப்புறத்திலிருந்து வந்த களப்பிரரும் பல்லவரும் தலையெடுக்கத் தொடங்கினர். அவர்களால் முறையே பௌத்த மற்றும் சமண சமயத்தைச் சார்ந்திருந்ததால் பாலி, பிராகிருதம் போன்ற மொழிகளும் அவற்றின் இலக்கியங்களும் கலாச்சாரங்களும் தோன்றி தமிழ் மரபையும் தமிழ் இலக்கியங்களையும்

பின்னுக்குத் தள்ளின. பெண்களை இழிவு படுத்தும் போக்கு மலிந்திருந்தது. இதனைக் கண்டு வெகுண்டெழுந்த சான்றோர்களால் உருவான இலக்கியங்களே நீதி இலக்கியங் கள். இவ்விலக்கியங்கள் விலை மகளிர் குறித்த செய்திகளைப் பல்வேறு இடங்களில் பதிவு செய்துள்ளன. அவற்றையும் பிற்காலத்தில் உருவான எழுத்தாளரான கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் விலைமகளிர் குறித்து மாற்றுச்சிந்தனையைத் தன் கவிதைகளினூடாக வெளிப்படுத்துகிறார் என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**நீதி நூல்களின் தன்மைகள்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் நீதி நூல்கள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தின. "நீதி நூல்களின் முன்னோடி வள்ளுவரே ஆவார்". முதன் முதலில் அறநூல்களில் வெண்பா என்னும் நடையை பயன்படுத்தியவரும் உலகின் தலைசிறந்த நீதி இலக்கியமான திருக்குறளைத் தந்தவரும் வள்ளுவர்தாம். நீதிகெழுமிய கருத்துக்கு ஏற்ற நடையாகக் கருதப்பட்டது வெண்பா எனும் யாப்பு முறைதான். நீதிகளைக் கூற எழுந்தவை நீதி நூல்கள். இவ்வாறு நடக்க வேண்டும் என்று விதித்தும் இவ்வாறு நடக்கக்கூடாது என்று விலக்கியும் செல்லும் தன்மையே நீதி நூல்களின் (போக்காகவும்) இயல்பு. இவ்வாறிருக்க இவைபெண்களைக் குறிப்பாக விலைமகளிரைச் சாடும் தன்மையே கொண்டிருக்கின்றன. ஆயின் இந்நூல்களில் கவிநயம் காண்பது அரிதாகத்தான் இருக்கும்.

சிற்பம், ஓவியம் முதலியவற்றின் நோக்கம் இன்பம் பயப்பதொன்றேயாகவும் இலக்கியத் தின் நோக்கம் அதனோடு நில்லாமல் மக்களின் வாழ்க்கையைச் சீர்செய்து வழிநடத்துவதாகவும் அமைந்திருத்தல் அவசியமாகிறது. தமிழில் உள்ள அறநூல்களைப் பற்றி பேசத் தொடங்கும் எவரும் திருக்குறளை முதலில் நினைத்தல் இயல்பு. தமிழ்ச் சமூகம் ஆண் இனத்தை உயர்வாகவும் பெண் இனத்தைத் தாழ்வாகவும் அதாவது, ஆணுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்ற எழுதாத விதியைத்தான் பின்பற்றி வந்தன. சங்க காலத்தில் உயர்வாக மதிக்கப்பட்டு போற்றப்பட்ட பெண்ணினம் நாளடைவில் பின்னுக்குத் தள்ளப்பட்டு போகப் பொருளாகவும் மாறிய நிலையை அதாவது, விலைமகளிராக உருமாறிய வேதனையைக் காண முடிகிறது. அறத்தைப் பாடிய நீதி நூல்களும் கூட ஒருதலைப் பட்சமாகப் பெண்களை விதிவசத்தால் விலைமகளிரான பெண்களை நிந்தித்தும் வஞ்சித்தும் தரம் தாழ்த்தியும் தன் எழுத்துக்களில் கூட இரணப்படுத்தின. அவற்றுக்கு வான்புகழ் கொண்ட வள்ளுவரும் விதிவிலக்கல்ல.

தீய பெண்களின் சேர்க்கையால் ஒருவன் தீமையை அடைய நேரிடும். வாழ்வில் சீரிய நிலையை ஒருவன் அடைய விரும்பினால் ஒழுக்க உடையவனாக இருத்தல் அவசியம். 'பெண்வழிச் சேறல்' - அதிகாரம் 91, 'வரைவின் மகளிர்' - அதிகாரம் 92 என்னும் இரு அதிகாரங்களாகப் பிரித்து எந்நாட்டவர்க் கும் எக்குலத்தவர்க்கும் உரியதாக எடுத்துரைக்கிறார்.

**அன்பின் விழையார் பொருள்விழையும்
ஆய்தொடியார்**

**இன்சொல் இழுக்குத் தரும்** (குறள்.911)

அன்போ, பாசமோ இல்லாமல் பணத்துக்காக மட்டும் இனிமையாகப் பேசும் வேசியரின் பேச்சுக்கள் துன்பத்தையே தரும்.

**பயன்தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பில்
மகளிர்**

**நயன்தூக்கி நள்ளா விடல்** (குறள்.912)

கிடைக்கும் பணத்தின் அளவுக்கே தந்திரமாகப் பேசி பாசாங்கு செய்யும் விலைமாதர் தொடர்பை விட்டுவிட வேண்டும் என்கிறார்.

**நல்வழி நூலில் விலை மகளிர்**

**அம்மி துணையாக ஆறிழிந்த ஆறொக்குங்**

**கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம்-
இம்மை**

**மறுமைக்கும் நன்றன்று மாநிதியம் போக்கி**

**வெறுமைக்கு வித்தாய் விடும்** (பா.எ.20)

தனது அங்கங்களையே மூலதனமாக்கி விற்கும் விலைமகளிரை நம்பி வாழலாம் என்று எண்ணுபவன் நிலையானது அம்மிக் கல்லைத் துணையாகக் கொண்டு ஆற்றில் இறங்கியவன் மூழ்கி துயருறுதல் போல் ஆகும். மேலும் பெரிய செல்வத்தை எல்லாம் விற்று இழந்து ஒன்றுமற்ற சரித்திர நிலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரிக்கிறது இப்பாடல். தவறு செய்யும் ஆணை எச்சரித்து விலை மகளிரைத் தூற்றுகிறார் ஔவையார்.

**விவேக சிந்தாமணியில் விலைமகளிர்**

**தன்னுட லினுக்கொன் றீந்தால் தக்கதோர் பலம தாகும்**

**மின்னியல் வேசிக் கீந்தால் மெய்யிலே வியாதி யாகும்**

**மன்னிய உறவோர்க் கீந்தால் வருவது மயக்க மாகும்**

**அன்னிய பரத்துக் கீந்தால் ஆருயிர்க் குதவி யாமே** (பா.எ.29)

உடலுக்கு ஒரு பொருளைக் கொடுத்தால் அதனால் உடலுக்கு வலிமை உண்டாகும். போலியான மின்னல் போல அன்பைக் காட்டி பொருள் இல்லாத போது மறைக்கும் குணம் உள்ள விலைமாதருக்குப் பொருள் கொடுத்து சேர்ந்தால் உடலுக்கு நோய் உண்டாகும். உறவினர்களுக்குக் கொடுத்தால் மனக்குழப்பம் வரும். தம்மோடு பழகிய அயலவர்களுக்குக் கொடுத்தால் தக்க காலத்தில் உயிருக்குத் துணையாகும்.

**வெம்புவாள் விழுவாள் பொய்யே**

**மேல் விழுந்து அழுவாள் பொய்யே**

**தம்பலம் தின்பாள் பொய்யே**

**சாகிறேன் என்பாள் பொய்யே**

**அம்பிலும் கொடிய கண்ணாள்**

**ஆயிரம் சிந்தையாளை**

**நம்பின பேர்கள் எல்லாம்**

**நாயினும் கடையாவாரே** (பா.எ.14)

விலைமாதரின் நடவடிக்கைகள் எல்லாம் உண்மை அன்பை உடையவர்களைப் போல் தோன்றினாலும் துன்பமே தரும். மேலும் அவளை நம்புதல் கூடாது. அவளுடைய செய்கைகள் எல்லாம் இன்னல் களைத் தந்து அழிவுக்கு வழிவகுக்கும். 'விளக்கொலியும் வேசியர் நட்பும் குன்றும்' என்பது நாலடியார் வாக்கு. இவ்வாறு மக்களை அறவழிப்படுத்தும் நீதி நூல்கள் கூட ஒருதலை பட்சமாகப் பெண்ணுக்கு மட்டும் அநீதியான திருப்பையே வழங்கின.

'கற்பெனப்படுவதை ஆணுக்கும் பெண்ணுக் கும் பொதுவில் வைப்போம்' என்ற தூய வார்த்தைக்குச் சொந்தக்காரரான பாரதியின் சிந்தனையைச் சீர்தூக்கிப் பார்க்கும் வேளை யில் அவரின் அடியொற்றியே கவிதை உலகில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கோலோச்சி வரும் கவிஞர் சிற்பியின் சிந்தனைச் சிறப்பையும் விலைமகளிர் வேதனையைத் தான் கண்ணுற்ற பாங்கை யும் தம் கவிதைகளில் படைத்துள்ளார்.

மரபு, புதுமை இரு துருவங்களிலும் நேர்த்தியாகப் பயணித்து வரும் கவிஞர் சிற்பி தன்னையே புகழ்ந்து கொள்ளும் பாங்கை நோக்குங்கால், 'நான் மரபின் மைந்தன். புதுமையின் பிள்ளை' என்று பெருமையோடு உரைக்கின்றார். பாட்டுக்கொரு புலவனும் பாவேந்தனும் கூட பெண்களில் கீழானோர் தொடர்பு வேண்டாம் என்றுரைத்து தாங்களும் ஆணிமே என்று சருக்கும் சில வேளைகளில் பெண்மையின் துயரை, சூழலின் அவதியை, நெருக் கடியைத் தாயுள்ளத்தோடு நோக்கி அவர்களின் தவிப்பையும் வேதனையையும் இயலாமைகளையும் தம் கவிதைகளில் தெள்ளத் தெளிவாக இயம்புகின்றார்.

தொடக்கத்திலும் வேத காலத்திலும் பெண்களே ஆட்சியிலும் அதிகாரத்திலும் முன்னிலை பெற்றிருக்க, நாளடைவில் தூய பெண்ணினம் தன்னிலை இழந்து தடுமாறிற்று. குப்பையில் கிடைத்த குண்டு மணியைச் சேற்றில் முளைத்த செந் தாமரையை அவை தோன்றிய இடத்தை ஆராயாமல் நாம் ஏற்றுக் கொள்வதைப் போல, கணிகையர் குளத்தில் பிறந்தாலும் கற்புக் குன்றாமல் வாழ்ந்து காட்டிய மாதவியின் சிறப்பை எடுத்துரைக்கும் வகையில்,

**அங்கங்களைக் கூறு போட்டு விற்கும்**

**அந்தச் சிறப்பங்காடியில்**

**பொதுவுடமையாக இருந்த**

**ஒரு கலைக்கூடம்**

**ஒருவனுக்குத்**

**தனியுடைமையாகித் தறுக்கிக் கொண்டது** (பரல்கள்.ப.932)

அங்கங்களையே மூலதனமாக்கி பொருளு டையவரையே நாளும் விரும்பிச் செல்லும் கணிகையர் குளத்தில் பிறந்து, கற்புடை தெய்வம் கண்ணகிக்கு நேர் இணையான மாதவியின் கற்பின் சிறப்பைக் கூறும் கவிதை இதுவாகும். கவிஞர் சிற்பியின் முற்போக்குச் சிந்தனையையும் பெண்குலத்தை மதிக்கும் மனப்பான்மையும் இக்கவிதையில் அழகுற இயம்புவதைக் காண முடிகிறது.

விலைமகளிர் என்று சமூகத்தால் இகழப்படும் பெண்கள் இயந்திரமாய் வாழும் அவல நிலையை வெளிப்படுத்தும் கவிதையில்,

**பசியில் களைந்த பகல்கள்**

**மல்லிகை நெடியில்**

**மயங்கிய**

**அந்திப் பொழுதுகள்**

**இமையில் கண்ணீரும்**

**இதயத்தில் ரத்தமும்**

**உறைந்து போன**

**நெடிய இரவுகள்**

**வைராக்கியங்கள்**

**பனிப்பொடியாய் உதிரும்**

**வைகறைகள்**

**முடிந்தன..... எல்லாம்**

**இப்போது முடிந்து போய்விட்டன**

**இனிமேலாவது**

**அவளைக் கொஞ்சம் தூங்க விடுங்கள்**
(பரல்கள்.ப.400)

என்று தூக்கத்திற்காக ஏங்கும் அப்பெண் களின் எதிர்பார்ப்பைத் தாயுள்ளத்தோடு பதிவிடுகின்றார் கவிஞர் சிற்பி.

பங்களாதேசத்திலிருந்து அகதிகளாக வந்த பெண்களைப் தமிழகத்தில் இருந்த சில தீய மனிதர்கள் விபச்சாரக் குழியில் தள்ளிவிட்ட பரிதாபத்தைச் சாக்கடைகளும் தான் இன்னும் வற்றி விடவில்லை என்ற தலைப்பில்,

**ஆம் உங்கள் சகோதரர்களில் சிலர்...**

**எங்கள் நிர்க்கதியான இளமைகளை**

**ஏலப் பொருளாக்கி மூலதனம்**
**குவித்தார்கள்!**

**அதனால் இப்போது**

**நாங்கள் சாக்கடைப் பூக்கள்**

**நரகத்தின் எச்சில் தொட்டில்கள்**

**இந்தப் புண்ணிய பாரத பூமியில்**

**கங்கைகள் இன்னும் வற்றிவிடவில்லை**

**சாக்கடைகளும் தான்**

**சாக்கடைகளும் தான்** (பரல்கள்.ப.402)

அகதிகள் என்றாலே ஒரு நாட்டிலிருந்து அனாதைகளாக வாழ இடமின்றி வேற்று நாட்டை நம்பி தஞ்சம் புகுபவர்களே ஆவர். அவர்களின் வாழ்வாதாரமும் பாதுகாப்பும் கேள்விக்குறியாகிவிட்ட நிலையில் எஞ்சியி ருக்கும் மானமும் சூறையாடப்பட்டால் எங்கு சென்று முறையிடுவார்கள். அறிவான, அழகான பெண்களைப் போற்றிப்பாட ஆயிரம் கவிஞர்கள் இங்குண்டு. ஆயின், அபலைகளின் நிலையைக் கூற நல்ல மனிதர்கள் சிலரே உண்டு. அவர்களுள் சிறப்பிடம் பிடித்தவர் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் ஆவார். ஆணினம் வலிமையோடு இயற்கையால் படைக்கப் பட்டதன் காரணமே உடலளவில் வலிமையற்ற பெண் குலத்தைப் பேணிக் காக்கும் பொருட்டே என்றால் மிகையாகா. அதை உணர்ந்த கவிஞர் சிற்பி அவர்கள் தம் கவிதைகளில் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட, கேட்க நாதியற்ற விலைமகளிரின் வாழ்க்கைச் சிக்கலை அழகுற எடுத்தாளுகின்றார். தம் கவிதைகளில் ஆண்கள் அனைவரையுமே தீயவர்கள் என்று கூறாமல், உங்கள் சகோதரர்களில் சிலர் என்ற பதத்தைப் பயன்படுத்துகிறார்.

**முடிவுரை**

பெண் இச்சையும் வேசியர் தொடர்பும் வாழ்வை அழிவுக்கு இட்டுச் செல்லும் என்று நீதி இலக்கியங்கள் கூறும் வேளையில், கவிஞர் சிற்பி அவர்கள் விலைமகளிருக் காகப் பரிந்து பேசுகிறார். பணத்திற்காகவோ, பொருளுக்காகவோ, தடம் புரளவில்லை. வறுமையும் சமூகச்சீர்கேடுமே அவர்களைப் பரத்தமை என்னும் படுகுழியில் தள்ளுவதைத் தம் கவிதைகள் வாயிலாக எடுத்துரைப்பதை நம்மால் கண்டுணரமுடிந்தது. அபலைகளின் அடைக்கலமாய் கவிஞர் சிற்பியின் கவிதைகள் அவர்களை ஆற்றுப்படுத்துகிறது.

**துணை நூற்பட்டியல்**


- கவிஞர் பத்மதேவன்(உரை)., இனிய நீதி நூல்கள்., உயிர்மை பதிப்பகம்., சென்னை - 600020., பதிப்பு 2013.
- டாக்டர் கொ.மா.கோதண்டம்., திருக்குறள்., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்., சென்னை - 600002., பதிப்பு 2012.
- ந.மு.வேங்கடாசாமி நாட்டார்., நல்வழி., பாரி புத்தக நிலையம்., சென்னை - 600001., பதிப்பு 2016.
- மா.கோமகன்(உரை)., விவேக சிந்தாமணி., சந்தியா பதிப்பகம்., சென்னை - 600083., பதிப்பு 2022.
- வல்லிக்கண்ணன்., புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்., பரிசல் வெளியீடு., சென்னை - 600106., பதிப்பு - 2022.